**DEPOSITION OF WITNESS**
**(Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE , ARANTHANGI**

| | | |
|---|---|---|
| **Calender** | | **STC.No.475/2017** |
| **Miscellaneous** | | |
| **Preliminary Register** | | |
| **Sessions** | | |
| **Deposition of witnesses for** | அ.சா.2 | |
| **Name:** | கருப்பையா | Caste |
| Father's Name | சாத்தையா | **Calling** |
| **Village** | | **Religion** |
| **Taluk** | | **Age 85 /22** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act II of 1993 of the day of 19.12.2022**

**சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**முதல் விசாரணை**

**1)** நான் வல்லம்பக்காடு கிராமத்தில் வசித்து வருகிறேன். புகார்தாரரை எனக்கு தெரியும். எனது மருமகள்தான். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். 2013 ம் ஆண்டு மாதம், தேதி ஞாபகம் இல்லை. எனது வீட்டிற்கு அருகில் இருந்த எனது மருமகளான புகார்தாரரை வீட்டிற்குள் புகுந்து ஆஜர் எதிரிகள் அடித்து மானபங்கம் படுத்தினர். என்னையும் அடித்துவிட்டார்கள். பிரேமா அவரது கொல்லைக்கு போகும் போது எதிரிகள் நாகராஜ், ரவி, லெட்சுமணன், கல்யாணி, காளியப்பன், சாத்தையா அனைவரும் சேர்ந்து அடித்துவிட்டார்கள். நாகராஜ் பிரேமாவினை வீட்டிற்குள் வைத்து கதவை சாத்திவிட்டார். நாகுடி காவல்நிலையத்தினர் வந்து தான் திறந்துவிட்டார்கள். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

2) ப.சா.2 காந்திமதி எனது மனைவி. ப.சா.3 முதல் 5 எனது உறவினர்கள் என்றால் ஆமாம். எதிரிகள் எனது பங்காளிகள் என்றால் ஆமாம். எதிரிகள் மீது ப.சா.1ன் கணவர் குப்புசாமி பாகப்பிரிவினை கோரி புதுக்கோட்டை சார்வு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.72/2012 என்ற வழக்கானது தாக்கல் செய்துள்ளார் என்றால் ஆமாம். சம்பவத்தின்போது ஆஜர் எதிரிகளை நாங்கள்தான் அடித்ததாக எங்கள் மீதும், என்மீதும் சமூகம் நீதிமன்றத்தில் CC.202/2013 வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் ஆமாம். நான் கூறுவது போன்று சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. அந்த வழக்கில் சமாதானம் ஆகவேண்டும் என்பதற்காக பொய்யாக இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. ப.சா.1னை நாகராஜ் வீட்டில் பூட்டிவைக்கவில்லை என்றாலும், யாரையும் அடிக்கவில்லை என்றாலும், நாங்கள்தான் எதிரிகளை அடித்து காயப்படுத்தினோம் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.